செ.வெ.எண் : 32 / ஜூன் நாள் : 15.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில், வேளாண்மைத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்நிலைகளை ஆழப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மைத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்நிலைகளை ஆழப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை 14.06.2017 அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஊரகப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை ஆழப்படுத்தி நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரித்திடும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி, நயினார்கோயில் ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் மேற்குறிப்பிட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள கண்மாய்கள், ஊரணிகள் உள்ளிட்ட நீர்நிலைகளை ஆழப்படுத்திட ஏதுவாக ரூ.1.5 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நகரமங்களம், மூவலூர், சிறுவயல் ஆகிய கிராமங்களில் உள்ள 7 ஊரணிகள், 1 கண்மாய் மற்றும் 1 நீர்செறியூட்டும் தண்டு என மொத்தம் 9 நீர்நிலைகளில் ஆழப்படுத்தும் பணிகள் ரூ.12.26 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து, நீர்நிலைகளை ஆழப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் பணிகளை மேலும் துரிதப்படுத்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அரிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வி.எஸ்.வெள்ளைச்சாமி, வேளாண்மை அலுவலர் திரு.அம்பேத்குமார் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**